**கொலொன்னாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 டிசெம்பர் 07 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 டிசெம்பா 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, கொலொன்னாவ நகர சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கிருந்த போதும் பல்வேறு காரணங்களின் நிமித்தம் கைவிடப்பட்ட ரூபா 668,703 மதிப்பீடும் பெறுமதியுடைய 03 வேலைகளுக்கு கடன் கொடுப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுத்தப்பட்டது. | சேவையைப் பெற்றதன் பின்னரே கடன் கொடுத்தோருக் கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்குறித்த 03 வேலைகளுக்கும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதால் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டது. தவிர்க்க முடியாத காரணங்களால் 03 வேலைகளையும் நிறைவேற்ற முடியவில்லை. எதிர்காலத்தில் கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து நீக்கி சீராக்கல் செய்யப்படும். |
| (ஆ) | கழிவுப் பொருட்களை அகற்றுவதன் பொருட்டு முத்துராஜவெல கழிவுப் பொருட்கள் பிரிவுக்கு நடப்பாண்டினதும் முன்னைய | கொடுப்பனவு செய்யவேண்டிய தொகைக்கு கடன் கொடுத்தோருக் | இக்கட்டணத்திலிருந்து எம்மை விடுவிக்குமாறு பொறுப்பானவர்களிடம் கேட்டுக் கொண்டதையடுத்து |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டினதும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 55497,857 ஆகும். இதற்குக் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். | கழிவுப் பொரு கட்டணம் அறவிடப்படாது என நகர அபிவிருத்தி சபையின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையானது ரூபா 82,729,720.17 VAT தொடக்கம் ரூபா 48,259,003.43+ VAT வரை குறைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | நேரடியாக பரிசீலிப்பதற்கு இல்லாத ரூபா 115,000 பெறுமதியான நீர் பவுசர் மற்றும் 137,400 பெறுமதியான கலீ பவுசர் என்பன மோட்டார் வாகனக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நேரடி பரிசீலனைக்குக் கிடைக்காத சொத்துக்கள் கணக்கிலிருந்து நீக்கப்பட வேண்டும். | 2000 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நீர் பவுசர் மற்றும் 2004 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கலீ பவுசர் என்பன துருப்பிடித்தமையால் பாவனையிலிருந்து நீக்கப்பட்டன. அவ்வாறிருக்க 2018 ஆம் ஆண்டில் அவ்வாகனங்களின் செஸி மற்றும் ஏனைய பாகங்கள் டியெள்ர்களில் நிலவிய குறைபாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டன. ஆகவே இந்த பாகங்கள் நேரடியாக பரிசீலனைக்கு இல்லாதிருப்பதுடன் இவற்றை கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் வாடகை நிலுவைக் கணக்கு மீதி ரூபா 49,126,96 ஆகிய போதும், அதனோடொத்த | குறித்த மீதி வித்தியாசத்தைக் கணக்கிணக்கம் செய்து | இவ்வித்தியாசம் 2018 வரை தொடர்வதால் எதிர்காலத்தில் சீராக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 24,56,753 ஆகியமையால் கணக்கிற்கும் பட்டோலைக்குமிடையே ரூபா 22,246,941 வித்தியாசம் நிலவியது | கணக்குகளை சீராக்க வேண்டும். | |
| (ஆ) | கொலொன்னாவ மக்கள் வங்கியின் 194100173792765 இலக்கமுடைய செயலற்றிருக்கும் கணக்கின் காசேட்டின் படியான வங்கி மீதி ரூபா 191,320 ஆகும். அக்கணக்கில் உள்ளவாறான வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 88,436 ஆகும். இவ்விரு மீதிகளுக்குமிடையேயான வித்தியாசம் அறியப்பட்டபோதும், நிதிக் கூற்றுக்களில் இவ்வங்கிக் கணக்கு மீதி ரூபா 52,533 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை கணக்கிணக்கம் செய்து சரியான மீதியை கணக்கிட வேண்டும். | கொலொன்னாவ மக்கள் வங்கியின் பழைய நடைமுறைக் கணக்கு 2019.12.31 இல் உள்ளவறான காசேட்டின் படியான மீதி மற்றும் நிதிக் கூற்றுகளில் உள்ள மீதி என்பவற்றை திருத்தம் செய்வதற்குரிய உறுதி செய்யும் ஆவணங்கள் இல்லாததால் இம்மீதியை சீராக்க முடியாதுள்ளது. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டடத்தின் 133 ஆம் பிரிவு. | 24,11,856 | சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள பொது நீர் வழங்கல் சபைக்கு மாதாந்தம் ரூபா 200,988 வீதப்படி 2019 ஆம் ஆண்டில் ரூபா 24,11,56 வழங்கப்பட்டிருந்தது. | கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நன்மைக்காக இச்செலவீனம் மேற்கொள்ளப்பட வேண்டியேற்பட்டதுஇப்பொது நீர்க் குழாயின் பொருட்டு நகர சபை பெறுமளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆரசியல்வாதிகளது தலையீட்டினால் இந்நீர்குழாயை அகற்றுவதற்கான வாய்ப்பு அருகியுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | 83,366,350 | தீர்வையை அறவிடுவதற்கு சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சகல அசையா சொத்துக்களும் 05 ஆண்டுதளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும் 07 ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்பைடையிலேயே தீர்வை அறவிடப்பட்டிருந்தது. | | வருவாய் பரிசோதகர்கள் தற்போது மதிப்பீட்டை மேற்கொண்ட வாறுள்ளனர். நுகரசபையின் 11 பிரிவுகளில் 5 பிரிவுகளது மதிப்பீடு நிறைவேறியுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோயலிக் குடியரசின் நிதிப்பிரமாண ம் 371(5) | 2,518,134 | வழங்கப்பட்ட முற்பணமானது வழங்கப்பட்ட நிதியாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும் நடப்பாண்டு இறுதி தினத்தன்றும் தீர்வு செய்யப்படாதிருந்த முற்பண மீதி 25,18,134 ஆகும். | முற்பணத்தை த தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருமதி எஸ். பிரேமவதியிடமிருந்து ரூபா 36,078 அறவிடப்பட வேண்டியுள்ளது. ஏனையவற்றை தீர்வு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | ஏனைய சுற்றறிக்கைக ள்<br>------------------------ | | | | |
| (i) | 2016 நவம்பர் 09 இன் LGD\13\2016 ஆம் இலக்க உள்ளூராட்சி நிலையச் சுற்றறிக்கை. | | கடை வாடகையை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்த ல் களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெல்லம்பிடிய பொது சந்தை உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட் டுள்ளது. அம்பத்தலை வீதியை விரிவடைய செய்யும் போது வர்த்தக நிலையங்கள் அப்புறப்படுத்தப்பட வுள்ளதால் உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட வில்லை. |
| (ii) | மேல் மாகாணத்தின் 2008 இலக்கம் 01 எனும் நகர | | உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கும் வரிக்குப் புறம்பாக வீட்டுக்கு வீடு கழிவுகளைக் | கழிவுப் பொருள் வரியை அறவிட நடவடிக்கை | தீர்வையும் வரியும் கைத்தொழில் வரி ஏனைய பொது சேவை கட்டணம் என பணம் அறவிடப்படுவதால் |

| | | |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைதுவம் - விதி18 (1) | சேகரிப்பதற்கான எடுக்க அளவை ஈடுசெய்ய வேண்டும். பிரதேசத்தில் உள்ள வியாபார நிலையங்களிலும் வரியை அறவிட சபை நடவடிக்கை எடுக்க வில்லை. | வர்த்தகர்கள் கழிவை அகற்றுவதற்கான பணம் செலுத்த விரும்பவில்லை. தொழிற்சாலைகள் மற்றும் மத்திய தரத்திலும் உயர்வான வர்த்தக நிலையத்திலிருந்து மாதாந்தம் ஒரு லோட் கழிவுப் பொருட்களுக்கு ரூபா 8000 வீதம் அறவிடப்படுகின்னது. கழிவுப் பொருள் வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 829,914,518 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 36,798,316 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறைக் கணக்கு இலக்கம் 194100153792766 இல் 1993 முதல் தொடரும் 15,000 பண மாற்றம் மற்றும் 1980 ஒக்டோபர் 17 ஆம் திகதி வைப்பிலிடபடபட்ட போதும் தேறாதிருக்கும் ரூபா 10,104 பெறுமதியான காசோலை ஒன்று வங்கிக் கூற்றில் மீதியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக காட்டப்பட்டிருந்ததுடன் அம்மீதியைச் சரிவர இனங்கண்டு தீர்வு செய்யப்படவில்லை. | தேறாத வைப்பை இனம் கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்களது தவறினால் ரூபா 15,000 கணக்கில் முன்கொண்டு வரப்பட்டுள்ளது. சபையின் அங்கீகாரத்துடன் இத்தொகை தீர்வு செய்யப்படும். வைப்பிலிடப்பட்டு தேறாது இருக்கும் காசோலை அரசாங்க உதவியுடனான செயற்பதிட்டம் ஒன்றிற்கு பெறப்பட்டதாகும். |
| (ஆ) | 2019 செப்டம்பர் 31 இல் உள்ளவாறான 194100173792765 இலக்க நடைமுறை கணக்கின் 2019 செப்டம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி | வங்கி கணக்கு மீதிக்கும் காசேட்டு மீதிக்கும் இடையேயான | வங்கிக் கணக்கிளைக் கூற்றில் கூடுதலாக பெறப்பட்டிருப்பதாக காட்டப்பட்ட ரூபா 831.18 தற்சமயம் |

| | | |
|---|---|---|
| கணக்கிற்கான கூற்றின் வங்கி மீதியில் காசு மாற்றங்கள், குறைவாக வைப்பிலிருத்தல், வங்கியால் கூடுதலாக வரவு வைக்கப்படுதல் என ரூபா 103,716 சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. கூடுதலாக கிடைக்கப் பெற்ற ரூபா 831 கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி சீராக்கலை உறுதி செய்வதற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை . ஏறக்குறைய 10 ஆண்டுகளாக செயலற்றவாறிருக்கும் இக் கணக்கினது வேறுபாடுகளை 06 மாதங்களுக்குள் தீர்வு செய்து அதனைக் கணக்கொழிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2019 நவம்பர் 14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | வேறுபாட்டை சீராக்குவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்குகளைச் சீராக்கியதன் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. ரூபா 82,299.83 காசு மாற்றம் , ரூபா 20,915.53 குறைவாக வைப்பிலிடப்படல் ரூபா 500 வங்கியால் கூடுதலாக வரவில் இடப்பட்டமை என்பன தீர்வு செய்யப்படுவதற்கான சான்றுதல்களைப் பெறுவது வசதி அற்றதாகையால் இயன்றவறை சீராக்கப்படும். |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 75,600,000 | 84,079,257 | 80,198,817 | 162,895,524 | 75,000,000 | 80,095,023 | 76,544,002 | 30,471,237 |
| (ii) | வாடகை | 4,437,960 | 4,437,960 | 5,348,988 | 1,267,974 | 4,499,670 | 15,437,540 | 15,238,566 | 3,370,102 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 350,000 | 350,000 | 598,000 | - | 300,000 | 1,499,515 | 1,499,515 | 43,450 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,106,030 | 4,106,030 | 4,106,030 | - | 16,740,191 | - | 16,740,191 | - |
| | | 84,493,990 | 92,973,247 | 90,251,835 | 164,163,498 | 96,539,861 | 97,032,078 | 110,022,274 | 33,884,789 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்லாண்டின் இறுதியில் உள்ளவாறான தீர்வை நிலுவை ரூபா 31,837,340 ஆகும். அதில் ரூபா 40,000க்கு மேற்பட்ட நிலுவை உடைய பெறுமதிமிக்க 71 மீதிகள் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 18,981,761 ஆகும். ஆதில் உள்ளடங்கிய ரூபா 70,45,302 மீதியில் எதுவுமே 2016 ஆம் ஆண்டின் பின்னர் அறவிடப்படிருக்கவில்லை. | தீர்வை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.08.31 இல் உள்ளவாறு ரூபா 84,22,843 அறவிடப்பட்டிருந்தது. இது 24 சதவீதமானதாகும். |

### 2.3.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாண்டின் போது 12 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 189,700 ஆகும். ஆண்டின் போது இதில் எதுவுமே அறவிடப்படவில்லை. | கடை வாடகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை நிலுவையை அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.3.4 வீட்டு வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வெல்லம்பிட்டிய சந்தியில் உள்ள 7 வீடுகளிலிருந்து நடப்பாண்டின் இறுதி தினத்தில் உள்ளவாறு ரூபா 337,150 நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. நான்கு வீடுகளது ரூபா 331,650 கூட்டுத்தொகை வாடகையாக எதுவுமே நடப்பாண்டில் அறவிடப்பாதிருந்தது. | தாமதமின்றி வீட்டு வாடகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை நிலுவையை அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

**கைவிடப்பட்ட பணிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நிறைவேற்றபட வேண்டிய ரூபா 113,41,613 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 24 பணிகள் ஆரம்பிக்காது கைவிடப்பட்டிருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த ஆண்டில் பொதுமக்களது எதிர்ப்பு காரணமாக வேலைகயைக் கைவிட்டமை, அரசியல் சார்பு நிறுவனங்கள் நடாத்தும் வெளிவாரி செயற்திட்டங்கலுக்கு முன்னுரிமை வழங்கியமை கால அவகாசம் கிடைக்காதது போன்றமை, காணியின் உரித்து போன்றவற்றால் ஏற்பட்ட சர்ச்சை இதற்கான காரணங்கலாக அமைந்துள்ளன. |
| (ii) | நடப்பாண்டின் வரவு, செலவு திட்டத்தில் வணக்கத் தலங்களது அபிவிருத்திக்கு ரூபா 18,000,00 மற்றும் வயது முதியோர்களது நலனோன்பல் என்பனவற்றிற்கு ரூபா 100,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அச் செயற்திட்டம் அமுலாக்கப்படவில்லை. | திட்டமிட்டபடி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் அந்த நிதியேற்பாட்டென் வணக்கத்தலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் வயது முதியோர்களுக்கான நலனோன்பை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகஹெமுல்ல விற்பனைக்கூடக் கட்டிடத்தை கூட்டுறவுக் கழகம் ஒன்றை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் அது மூடப்பட்டதுடன் நடப்பாண்டு இறுதித் தினத்தன்று உள்ளவாறு ரூபா 59,000 வாடகை நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | வாடகை நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூட்டுறவுச் சந்தையை நவீன மயப்படுத்துபவர்கள் அங்கு தங்கியிருக்க வசதியளிக்கப் பட்டிருந்தது. மீண்டும் கூட்டுறவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 2020.09.23 அன்று |

| | | |
|---|---|---|
| | | கடிதம் முலம் தகவல் தெரிவித்திருந்தனர். |
| மீளாண்டின் போது பெறுமக்களது 253 பல்வேறு புகார்கள் பெறப்பட்ட போதும், அவற்றில் 104 புகார்களுக்கு மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது மக்களது புகார் பதிவேட்டை நாளது வரையாக்கி தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | பொது மக்களது புகார்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும், பொது மக்களது புகார் பதிவேட்டை தொடர்ச்சியாக நாளது வரையறுக்ககுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியில் 09 வெற்றிடங்கள் நிலவின. | அத்தியாவசிய வெற்றிடங்கள் நிறப்பப்பட வேண்டும். | கருத்து வெளியிடவில்லை. |
| (ஆ) சபையின் செயலாளர் பதவிக்கு நிர்வாக சேவையின் 111/11 பதவியில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் தர பெண் உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு முகாமைத்துவ சேவையின் 1ஆம் தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | அத்தியாவசிய வெற்றிடங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப்பதவி நியமனங்களுக்கு அரசாங்க சேவைக் ஆணைக் குழு பொறுப்பாகும். |
| (இ) எட்டு சிற்றூழியர்களுக்கு புறம்பாக 15 சுகாதாரத் தொழிலாளர்களும் 06 வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களும் தலைமை அலுவலகப் பணியில் அமர்த்கப்பட்டனர். | குறித்த ஊழியர்கள் அவர்களுக்குரிய கடமைகளில் ஈடுபத்தப்பட வேண்டும். | சிற்றூழியர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியின் எண்ணிக்கை 11 ஆகும். எனினும் தலைமை அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களதும் மக்கள் பிரதிநிதிகளதும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக சிற்றூழியர்கள் போதுமானதாக இல்லாமையினால் அச் சுகாதார மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களும் தலைமை அலுவலகம் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். |
| (ஈ) | **ஊழியர் கடன்**<br>சேவையிலிருந்து விலகிய மற்றும் மரணமடைந்த 32 ஊழியர்களிடமிருந்து வருமதியாக இருந்த கடன் மீதி ரூபா 782,502 ஆகும். அதில் 30 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 692,811 அறவிடப்படாதிருந்த காலம் 5 முதல் 20 ஆண்டுகளாகும். | தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு தாமதமின்றி கடன் அறவிடப்பட வேண்டும். | கடன் நிலுவையையுடைய ஊழியர்கள் கடனைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டனர். ரூபா 107,180 கடனாளியின் கடன் உரித்தாளரிமிருந்து தவனை ரீதியில் அறவிடப்படுகின்றது. சேவை விலகிய ஊழியர்களது கடன் பிணையாளிகளிடமிருந்து அவர்களது மாதச் சம்பளத்திலிருந்து தவணை ரீதியில் அறவிடப்படுகின்றது. 2 கடன்பட்டோரது கடன் ஓய்வூதிய பணத்திலிருந்து அறவிடப்பட்டது. சேவை விலகிய ஒரு ஊழியரின் மொத்த தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 3.4 செயற்பாட்டு வினைத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 229,683 பெறுமதியுடைய 598 புத்தகம் பிள்ளைகளுக்கிடையே விநியோகிக்கப்படாது 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதிவரையிலும் களஞ்சியத்தில் தேங்கியிருந்தன. | குறித்த நோக்கம் நிறைவேறும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒக்டோபர் மாத இறுதிக்கு முன்னர் புத்தகங்களை பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் அகலவத்த மற்றும் வலல்லாவிட்ட பிரதேச சபைகளிலிருந்து வாகனங்களைப் பறிமாற்றம் செய்ததன் மூலம் பெறப்பட்ட ரூபா 5,900,000 பெறுமதியான 02 டிப்பர்களும் 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதியன்று சுவீகரிக்கப்படாதிருந்தன. | குறித்த வாகனங்களை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பரிமாற்றம் செய்யப்பட்ட அகலவத்த பிரதேச சபையின் 11-6089 இலக்க டிப்பர் மற்றும் வலல்லாவிட்ட பிரதேச சபையின் LL-0018 இலக்க டிப்பர் ஆகியவற்றை கொலொன்னாவை நகரசபை சட்ட ரீதியாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 379,500 பெறுமதியான கொங்கிறீட் கலவை இயந்திரம் ஒன்றும் ரூபா 511,750 பெறுமதியான மின் உற்பத்தி சாதனமும் 04 பிளாஷ் லைட்களும் 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதியளவிலும் பாவனையில்லாது களஞ்சியத்தில் இருந்தன. | குறித்த இயந்திரங்களை வினைத்திறனுடன் செயற்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்தலாம். | பகல் வேளைகளில் வீதிப் பராமரிப்பு மேற்கொள்ளப்பட முடியாத சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட முடியும். இந்த இயந்திரம் மூலதனச் சொத்தாகும். ஏதிர்காலத்தில் கொள்வனவு செய்வதாயின் அதிக பணம் செலவாகும் என்பதால் சபைக்கு இழப்பில்லை. பயனுள்ளவாறு பயன்படுத்த நவவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நகர சபை வளாகத்தில் ரூபா 1,516,250 பெறுமதியான 03 டிறக்டர்களும் பெறுமதி கண்டறியப்படாத 02 டிறக்டர்களும் இருந்தன. இவை துறுப்பிடித்திருந்தன. இவ்வாகனங்களைப் பழுதுபார்த்துப் பயன்படுத்த அல்லது கைதவிர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை | தாமதமின்றி கை தவிர்ப்பு செய்யப்பட வேண்டும். | நிதிச் அறிக்கை 09/2015க்கமைய அரச நிறுவனம் ஒன்றில் 10 ஆண்டுகளுக்கு மேலாக செயலாற்று இருக்கும் வாகனம் கை தவிர்ப்பு செய்யப்பட வேண்டும். அதற்கமைய, சபையில் 30 – 10 ஆண்டுளாக உள்ள வாகனங்களை அறிக்கையிட்டு 2020.07.16 ஆம் திகதி |

| | | |
|---|---|---|
| | | மற்ற சபைக்கட்டடத்தில் சமர்பிக்கப்பட்டு கை தவிர்ப்புளை சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.தற்போது கைதவிர்ப்பு நடைபெற்றவாறுள்ளது. |

**3.6 பொருட் கொள்வனவு**

**3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 (அ) பிரகாரம் குறைந்தது 03 ஆண்டுகளுக்கு எதிர்பாக்கப்படும் பொருட்கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடக்கிய பிரதான பொருட் கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படவில்லை | தாமதமின்றி பிரதான பொருட் கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 (அ) பிரகாரம் குறைந்தது 03 ஆண்டுகளுக்கு எதிர்பாக்கப்படும் பொருட் கொள்வனவை உள்ளடக்கிய பிரதான பொருட் கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படாததுடன் நகர சபை வருடாந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படும் போது பொருட்கொள்வனவு முன்மொழிதலை பெற்று அதற்கமைய வருடாந்த பொருட்கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படும். |